உ

சிவமயம்



அமரர்

# கணபதிப்பிள்ளை துரையப்பா

அவர்களின் சிவபதம் அடைந்தமை குறித்த

# 31ம் நாள் நினைவு மலர்

19.07.2014

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாச விளக்காய் இருந்தே
எமையெல்லாம் நேசமொடு அரவணைத்தே
உயர்கல்வி தந்தெம்மை உயர்த்தினீர்
செல்வமெல்லாம் குறையாமல்
ஏணியாய் இருந்தே ஏற்றி வைத்தீர்
எமக்கெலாம் நல் அறிவுரை கூறியே
வாழ்க்கைப் பாடத்தை இனிய கரும்பாய்
விரும்பி அனுபவித்தே உத்தமரானீர்
காலன் உம்மைப் பறித்தெடுத்தாலும்
இனிய நினைவுகள் என்றும்
நீங்குவதில்லை
விண்ணகம் சென்ற போதும் நீங்கள்
தெய்வமாய் வந்தே நல்வழிகாட்ட
தெண்டனிட்டே உள்ளம் உருகி
இந்நூலை பாதகாணிக்கையாய்
சமர்ப்பணம் செய்து நிற்போம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
03.05.1934

உதிர்வு
19.06.2014

அமரர்

# கணபதிப்பிள்ளை துரையப்பா

அவர்கள்

## திதி நிர்ணயம்

சிந்தை நிறை ஜயவருடத்து சிறந்தமதி ஆனியில்
வந்த திதி சப்தமி தேய்பிறையில் சந்ததிசூழ்
துரையப்பா எனும் காராளன் புவிநீத்து
எந்தை பிரானடி இணைந்தார் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்





## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோடும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செயம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே விசையுமாறிசையே.

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கள் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவு இலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வும் ஆகி தோன்றிய பொருளும் ஆகி
வேதியா ஏகம் ஆகி பெண்ணுமாய் ஆணும் ஆகி
சோதியாய் நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் எழில்நீறும்
 இலங்குநூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
 அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
 உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெடாமாமயில் வரவேணும்
 அமைந்தவேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவரச் சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே! தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே

சொல்விற் பணமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்
## காப்பு
## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போம்
துன்பம்போம் ! நெஞ்சிற்
பதிப்போர்க்கு செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலருள்
கந்த சஷ்டி கவந்த தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் மன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலோலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வரு!
வாசவன் மருகா வருக! வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ வரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிறி நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொளி யும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவகுகன்தினம் வருக!
ஆறு முமமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில்நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்(து)
அழகிய மார்பில்
பலபூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மாஉபும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்த
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினை காக்க
விரிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைசட செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருவேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிஉவேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வராட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமாஷ்தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும்சண் டாளஉகளும்
என்பெயர் சொல்லவும்இடிவிழுந் தோடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை அடியினில்அரும் பாவைகளும்
பூனை மயிரும்பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும்நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனேபலகல சத்துடன்
மனையிற் புதைத்தவஞ்சனை தனையும்
ஒட்டியப்பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிக் கட்டு
கட்டு யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூஉடப்பகைச் சொக்கு
குத்து குத்து சூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேவலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள்கடுந்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுஉ லகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொளழ பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாகஆடினேன்
நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சிஅன்னமும் சொன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தமெத் தாக வேலா யுதனார்!
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷடி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்த நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்குவிருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்வியதேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேளை போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரணம் பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்நத மனோலயம்

(தில்லையில் அருளியது - அறுசீரிய விருத்தம்)

முத்துநல் தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியம் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சிதியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே . 8

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவசி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே . 16

சுந்தர நீறணந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே . 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேசம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பரிந்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே . 32

அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்கெளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேசம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
சாடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 40

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
சாண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடிந்தும் நாமே. 48

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே .

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே .

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே .

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கத் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிச் கண்ணினைப் பொற்றொடித்தோன்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே . 95

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே . 104

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே . 112

ஞானக் கரும்பின் தெளியைப் பாசை
நாடற் கரிய நலத்தை நத்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே . 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும் வந்தன்பர்தம்போ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே . 128

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேன்
வானக மாமதிப் பள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச் சுண்ணம் இடித்தும்நாமே . 136

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருச்சுனன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைச் சொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல் பாடி
இயைந்தன் முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே . 144



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதிளம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிக்
கட்டிய மாகணக்கச்சைப்பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே . 152

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதிய மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே . 160



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப்பிள்ளையார் பாடல்

தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையின் பாடியது

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முன்னூறுநாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வந் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தே என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை இட்ட தீ முப்புரத்திலேஸ
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்க மூழ்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீட்டிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.கணபதிப்பிள்ளை துரையப்பா அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

முத்துக்கள் விளையும் தேன்தனிலே.
நெல்வயலும், கடல்வளமும் பெருகிநிற்கும்
வாழையொடு கனிகள் தேன்சொரியும்
சம்பூர் எனும் பெரும் பதியின் மடியிலே
ஊமையற்றதோர் ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்திநான்கில்
வேளாளர் வழிவந்த கணபதிப்பிள்ளைக்கும்
நன்மரையாள் நாகமுத்துவிற்குமாய்
ஐந்தாவது நற்புதல்வனாய் துரையப்பா பிறந்தார்.
நல்லையா பசுபதிப்பிள்ளை இராசம்மா
கந்தசாமி உடனாய் தம்பிராசா சரஸ்வதி
சிவபாக்கியம் ஈறாய் நடராசபிள்ளை
அருமைச் சகோதரங்களாய் வந்து வாய்ந்தார்
செல்வமும் பெருகி கலைகளும் வளர்ந்து வரவே
துள்ளி விளையாடும் பள்ளிப் பருவமும் சேர்ந்து வரவே
சகோதரர்களுடன் இணைந்தே பள்ளி சென்றார்.
கல்வியுடனே குலத் தொழிலையும்
கண்ணெனப் போற்றியே பெருமைகண்டார்
உறவுகளைச் சேர்த்தணைக்கும் பாங்கும்
மூத்தோர் வார்த்தை கேட்கும் திறனும்
உற்றார் போற்ற ஊரார் ஏற்ற
வளர்ந்து வரும் இளம் காளைபோலல்
பருவவயதும் கூடிவரவே நாற்பத்தொன்பதில்
திருமணம் செய்தே அழகுபார்த்தனர்
இராமனும் சீதையும் இணைந்து நின்றதுபோல்
தொல்லைகள் நீக்கி சீரிய வாழ்வு கண்டனர்.
கணவனுக்கேற்ற குலமகளாகி வரவுகண்டே
செலவுகள் செய்தே இல்லறம் சிறக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் துணைவியாய் சிறந்து நின்றார்
காளிகோவிலில் பக்தி கொண்ட துரையப்பா
இறையாத்து நற்குடி காக்கவே இறைபணி புரிந்தார்.
பதினைந்து ஆண்டுகள் சேவகம் செய்தே
பொருளாளனாகி நற்பணி செய்தார்
திருவிழா நேரம் துடிப்போடு இயங்கி
சொந்த நிதியை செலவு செய்தே மகிழ்ந்தார்
காலமும் நேரம் மாறிவரும் வேளையிலே
சந்திரேஸ்வதி சந்திரசேகரம் தவராசா
இராஜேஸ்வரன் உடன் நாகேஸ்வரன் விமலேஸ்வரி
சௌந்திரராஜா கிருபைராஜ் ஈறாய் குகராசா
அன்புமக்களாய் வந்து பிறந்தனர்
கல்வியை ஊட்டி கருத்தினில் ஏற்றி
மக்களையெல்லாம் அரச ஊழியனாக்கினார்.
செல்வம் பெருகிவரவே இயல்புக்கேற்ப
திருமணவாழ்வு காட்டி சந்ததி பெருக்கினார்
நல்லையா அண்ணனை தந்தையாய் ஏற்றார்.
பசுபதிப் பிள்ளையை தாயெனப் போற்றினார்
நாட்டின் சூழல் இறுகி வரும் வேளை
மூத்த மகளின் கணவனை இழந்து நின்றார்.
பிள்ளைகள் காப்பதைக் கடனெனைக் கொண்டார்
அடுக்கடுக்காக இடிவிழுந்தது போலே
அன்பு மகனாம் சௌந்திரராஜனை இழந்தார்
சுக்குநூறாய் மனமுடைந்த போதிலும்
வாழ்க்கைக் கப்பலைச் செலுத்தும் மாலுமியாய்
துன்பத்தைச் சகித்து இன்பம் எய்தார்
பிள்ளைகள் மீதே கொள்ளை ஆசையாய்
பேரக் குழந்தைகளை அள்ளி அணைத்தார்.
சம்பூர் மண்ணும் இழந்து போகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை வந்தே மகனுடன் இணைந்தார்
ஊருக்குச் செல்லும் நாளை எண்ணியே
காலத்தை எண்ணி பெரும் தவம் செய்தார்

மண்ணக வாழ்வு முடிந்து போகவே
நோய் நொடி கண்டு துன்பம் கண்டார்
ஓடிய மேகம் நின்றது போலவும்
எறிந்த சூரியன் ஒதுங்கியது போலவும்
உற்றாரும் உறவினர்களும் கதறியழவே
காலனும் வந்து வலிந்து அழைத்திட
ஜயவருட ஆனிமாத காலை வேளையில்
சங்கரன் பாதத்தில் இணைந்து கொள்ள
விண்ணகம் நோக்கி விரைந்து சென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே இனிக் காண்போம்............

ஊனையும் உயிரையும் ஊட்டி
வளர்த்த அன்புத் தந்தையே
எங்கு சென்று மறைந்தீர் எமைப் பிரிந்தே
ஊருக்குச் செல்லும் கனவோடிருந்தீர்
ஊரார் கூடி அழ மறைந்ததேனோ!

பசி தெரியாமல் எமை வளர்த்தீர்
விரும்பிய படியே திருமணவாழ்வு தந்தீர்
கண்ணிலே வைத்து எமைக்காத்தீர்
உறவு சொல்லி அழைப்பதற்கே
உறவு காட்டி வளர்த்தெடுத்தீர்

வெள்ளை உடையிலே வரும் வேளையிலே
மனம் குளிரக் கண்டு மகிழ்வோம்.
இரண்டு மகள் மீதும் காட்டிய அன்பு கண்டோம்
தெய்வத்தை எப்போதும் மனதில் வைத்தாய்
உறவினை தினமும் அருகில் வைத்தீர்
விரைவாய் காலன் பறித்ததென்ன
அம்மாவைப் பிரிந்து எங்கு சென்றீர்
தெய்வமாய் வந்து எமைக்காக்க
தினம் தினமாய்ப் பணிகின்றோம்

**அன்பு மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொண்ட நாள் முதல் குறையேது கண்டேன்.......

மனைவியாய் வாய்த்த நாள்முதலாய்
குறைவில்லாத வாழ்வு தந்தாய்
கோபம் வரும் வேளையெல்லாம்
மௌனமாய் இருப்பேன்
அன்பு காட்டி மகிழ்ச்சி தந்தாய்
தனிமரமாய் எனைத் தவிக்க விட்டே
தூரதேசம் சென்றதேனோ!

பிள்ளைகள் மீதே அன்பு கலந்த கண்டிப்பு
பேரக்குழந்தைகள் மீதுகொள்ளை ஆசை

இரவுபகலாய் உழைத்து உழைத்து
மக்களுக்கு நல்ல கல்வி தந்தீர்
நினைக்கும் போது கண்ணீர் வடிகிறதே
கண்மூடித் திறக்கும் முன்னே
மண்மீது கொண்ட ஆசை இழந்ததென்ன
ஆயிரம் ஆறுதல் கிடைத்த போதும்
சிறகொடிந்த பறவையாய் வாடுகின்றேன்.

**அன்பு மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மப்பாவைத் தேடுகின்றோம்

இறைவன் செயலாலே
பேரக்குழந்தைகள் ஆனோம்
அழுது வடித்த போது
கண்ணீர் துடைத்து வைத்தீர்
பெயரைச் சொல்லும் போதே
அகமகிழ்ந்து போவோம்
ஆசை முகம் காணாது
அலறித் துடிக்கின்றோம்
பாசக் கரம் கொண்டே
அணைத்தெடுக்க மாட்டீரோ
பிறப்பு என்பது உண்மையானால்
மீண்டும் எம் மடிதேடி
விரைந்து வர வேண்டுகின்றோம்.
கண் இமைக்கும் நேரமதில்
எம்மாசை கரைந்ததேனோ
மலர்தூவித் துதிக்கின்றோம்
விரைந்துவர நினைக்கின்றோம்

**பேரக்குழந்தைகள்**

## தேற்றம்

தேறுதேறு நீ மனமே சித்தும் அசத்தும் இரண்டதனில்
தேறும் போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும் அசத்தென்றே
கூறும் பஞ்ச பூதத்தால் கூட்டிய இந்தப்பண்டமது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான் அழிந்திலதே

**கவிதையாக்கம் : க.யோகானந்தன்**
**(அதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் காட்டும் தத்துவங்கள்

சில வாகனங்கள் வேறு பொருள்களையும் காட்டுகின்றன. உவ்வொரு மூர்த்திகளுக்கும் சிறப்பாக ஒவ்வொரு வாகனம் உண்டு. ஒரு மூர்த்தியே பல வாகனங்களில் வருவது வழக்கம். பல மூர்த்திகளும் ஒரு மூர்த்திதானே!



சில வாகனங்களின் பொருள்களைக் கீழ்க்காண்க.

**இடபம் (எருது)**

01. நான்கு கால்கள் நான்கு அந்தக்கரணங்கள் இவை சக்தியில் ஒடுங்க சக்தி ஞானம் தோன்றும் - இஞ்ஞானம் பசு ரூபமாகிய பசு போதம் : இப்பசு ஞானத்திற்கு மேலான பதி ஞானத்திலே விளங்குபவர் சிவபெருமான்.
02. சமம், விசாரம், சந்தோஷம், சாது, சங்கம் ஆகிய நான்கு குணங்களும் தரும் தேவதையின் நான்கு குணங்கள் : அவை கால்களாகும் : அத்தரும தேவதை தூய வெண்மையானது அத்தருமத தேவதையே வாகனமாகக் கொண்டு அருள் செய்வார்.
03. ஒரு காலத்தில் தர்ம தேவதையும் விஷ்ணுவும் வேண்டிக் கொண்டபடியால், அவைகளையே வாகனமாகக் கொண்டார் என்றும் கூறுவர். புண்ணிய வடிவான இடபம் மீதே சிவபெருமான் காட்சி கொடுக்கின்றார் என்பது பிரத்தியட்சம். பொறுமையே எருது என்றுஞ் சொல்வர்.

**மூஷிகம் (பெருச்சாளி, மூஞ்சுறு, எலி எனப்படும்)**



01. இது சிறப்பாக விநாயகருக்குரியது : கயமுக அசுரன் மூஷிகமாய் வர அருள் செய்து அவனை அடிமை கொண்டு வாகனமாக்கியது.
02. விநாயகர் ஓங்கார வடிவம் : அதனுள் பேரண்டங்கள் அடங்கும். அவைகளை அடக்கியிருக்கும் பெரிய வடிவினை உடையவர். சிறிய மூஞ்சுறுவும் தாங்கக் கூடிய அவ்வளவு சிறிய வடிவினராயும் அமைய வல்லவர்.
03. ஆன்மா அளப்பெரிய பெருமையுடையது. அவ்வாறே நுண்மையுடையது: உடல் சிறிதாய் இருந்தாலும், உள்ளிருக்கும் ஆன்மா சிறிதல்ல: யானை உருவான பெரிய வடிவத்தையும் அது தாங்க முடியும் : இன்னும் பலவாறும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்



இது முருகப் பெருமானுக்கு சிறப்பாக உரியது.

01. சூரபத்மனை வேலால் பிளந்து, ஞானமீந்து மயிலாக்கி அடிமை கொண்டது.

02. முருகன் அழகுடையவன் : அதை விளக்க அழகுள்ள மயிலை வாகனமாக்கினார் : மயிலின் காலின் கீழ்ப்பாம்பு இருக்கிறது : அது குண்டலினி சக்தியைக் குறிப்பது : சக்தியை அடக்கி ஆளும் சக்தி வடிவேல்தான் என்பது.

03. திரோதன சக்தியாய், ஆன்மாக்களின் ஆணவ மலத்தை முதிர்வித்துப் போக்கி, அருட் சக்தியாய் நின்று, ஆட்கொள்பவர் தாமே என்பது.

04. பிரணவத்தை பீடமாய்க் கொண்டு மேலாய் விளங்குபவர் தாமே என்பது.


05. விந்து தத்துவமாகிய சக்தியே உலகத்தை விரித்துக் காட்டுவது : அச்சக்தியின் விரிவை விளக்கவே மயில் தோகையை விரித்து வாகனமாய் இருப்பது என்று இன்னொரன்ன பல கருத்துக்களை கூறுவர்.

குதிரை

அசுவம், வாசி, முதலிய பல பெயர் பெறும்.

01. வேதமே குதிரையாய் உடையவர்.

| | |
|---|---|
| கால்கள் நான்கு | - அறம், பொருள், இன்பம், வீடு |
| காதுகள் இரண்டு | - கர்மகாண்டம், ஞானகாண்டம் |
| கண்கள் இரண்டு | - பரமஞானம், அபரஞானம் |
| முகம் | - விதி, ஊழ், முன்வினை, சஞ்சிதம் |
| வால் | - விலக்க வேண்டிய செய்கைகள் |
| முதுகு | - அண்ட கோடிகளின் திரட்சி |
| குளம்புகளின் மேற்பரப்புகள் | - சூரியர், சந்திரர் |
| சேணம் | - பிரபல சுருதி (வேதாந்தம்) |
| புறத்துள்ள சுழிகள் | - சிவாகமங்கள் |
| சதங்கை, சிலம்பு கிண்ணினி, மாலைகள் | } ஆகமங்கள் கூறும் மந்திரங்கள் |
| கடிவாளம் | - பிரணவம் |



அவ்வேதமாகிய குதிரையில் ஆரோகித்து, புறச்சமயங்களாகிய படைகளை அழித்து, வெற்றி கொள்பவர் தாமே ஆதலால் வேதரூபர், வேதாந்தர் என்பது.

02.வாசி - சுவாசம் - மூச்சு : பிரணவவாயுவை நடுநாடியிற் செலுத்தி, ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலாதாரத்தில் உள்ள ஆயிரம் இதழ்கமலத்தில் சவாரி செய்து, அமிர்த பானம் பண்ணி நிற்கும் சிவயோகிகளுக்கு சிவபெருமான் சுகோதைவாசிக்கு (குதிரைக்கு) மேலாய் விளங்கி நிற்பவர் என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதம் - தேர்

இது அண்டம், பிண்டம் இரண்டையும் விளங்கச் செய்வது.

அச்சு - மந்திர கலை

சக்கரம் - சூரிய சந்திரர்

தட்டுக்கள் - பதினான்கு உலகம்

ஆசனம் - ஆகாயம்

கொடிஞ்சி - புண்ணிய நதிகள், குளங்கள் ஆகியன

விதானம் - நட்சத்திரங்கள்

மேல்விரி - மோட்சலோகம்

சட்டங்கள் - யாகங்கள்

திரைச்சீலை - ஏழு சமுத்திரங்கள்

கலன்கள் - கர்மேந்திரிய, ஞானேந்திரியங்கள்

துளைகள் - அறுபத்து நான்கு கலைகள்


மணிகள் - வேத உபாகம, தர்ம நூல்கள்

வில்லிற் கட்டிய மணி - சரஸ்வதி

அம்பு - விஷ்ணு

அம்பு இறகு - வாயு தேவன்

அம்பின் கூர் - அக்கினி தேவன்



இத்தேரில் கங்கை முதலிய தேவ மாதர்கள் பாட, ஊர்வசி முதலிய நடன மாதர்கள் நடிக்க, சிவபெருமான் எழுந்தருளி, தேவர்கள் வேண்டி கேட்டபடி திரிபுரத்து அசுரர்களையும் அவர்கள் நகரங்களையும புன்சிரிப்பால் அழித்து, அம்மூன்று அசுரர்களைம் ஆட்கொண்டு தேவர்களைக் காத்தது.

(அ) தாரகட்சன் - விஞ்ஞானகலர் - ஆணவம்

(ஆ) கமலாட்சன் - பிரளயாகல் - ஆணவமும் கன்மமும்

(இ) வித்தியுன்மாலி - சகலர் - மும்மலம்

02. சரீரத்தில் ஆறு ஆதாரங்களுக்கு ஆன்மாவைச் செலுத்தி, நிரதிசய ஆநந்த ரூபியாய் அசையாமல் தேர்போல் நில் என்பதையும் கருதும்

03. திரோதான சக்தியின் விரிவைக் குறிப்பது என்பாருமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்முக நாகம்



01. பாம்பு, நஞ்சு, மாணிக்கம், படம் மூன்றையும் மறைத்து வேண்டும் போது வெளிப்படுத்தும் வல்லமை உடையது. தானும் புற்றில் மறைந்து வெளிவரும் தொழில் உடையது. அதுபோல, திரோதான சக்தி பக்குவம் வரும் வரையும் மறைந்திருந்து வேண்டும் போது வெளிப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள்புரியுந்தன்மையுடையது.

02. குண்டலினி சக்தி பாம்பு வடிவமானது : அதன் விரிவு, ஒடுக்கமே பிரபஞ்சத்தோற்றம், ஒடுக்கம், அச்சத்திற்கு நிமித்த காரணமாய் உள்ளவர் தாமே என்பது.

03. குண்டலினி சக்தியை ஆறாதாரங்களின் வழியாய்ச் செலுத்தும் போது மூலாதாரத்திற்கு மேலாயுள்ள மற்ற ஐந்து ஆதாரங்களிலும் அது அடையும் மாற்றத்தையே ஐம்முக நாகம் என் றுஉருவகப்படுத்திக் கூறுவர் யோகியர் என்பர்.



யானை

01. விஷ்ணுவும், பரஞானமும், பிரணவமும் முருகப் பொருமானை வேண்டி, யானை வாகனவடிவங் கொண்டு தாங்கிச் சென்ற படியால், விஷ்ணுவுக்கு மேலானவரும் பிரணவத்துக்கு மேலாய் அப்பொருளாய் இருப்பவரும், பரஞானத்தை கொடுப்பவரும் அவரே என்பதும்.

02. தும்பிக்கை போன்ற சுழுமுனா நாடிவழியாய்த் தன்னைத் தரிசிக்க வேண்டும் என்பதுமாம்.

சிங்கம்



பொதுவாய் இது இம்மனுடைய வாகனம். துர்க்கை, காளி, முதலிய மூர்த்திகளுக்கு இது வாகனம். பராக்கிரமத்தை குறிக்கும். மிருகங்களை அடக்கி ஆள்வது போல, தேவியும் வேண்டுவாருடைய கொடிய குணங்களை ஓட்டி, அடக்கி, ஆண்டருள் புரிவாள்.

பூதவாகனம்

பஞ்ச பூதங்களிலும் நின்ற விளங்குவோன் தானே என்பதையும்,ஆன்மாக்களுக்குக் கன்மானுகூலமான மரணாவஸ்தையை விதிக்கின்றவரும் தாமே என்பதையும் தருவது.

சேவற்கொடி

01. அது கூவும் பொருள் : கொக்கரக்கோ, கொக்கரக்கோ - கொக்கு - அர - கோ, கொக்கு - மாமரம் - சூரபத்மன், அர - அறுத்த, கோ - அரசன். எனவே மாமரமாய் நின்ற சூரனை அறுத்து, தேவர்கள் துன்பத்தைப் போக்கிய அரசர்க்கரசனாகிய முருகா!

02. முருகனின் சிறப்பு வாகனம். நாத தத்துவத்தைக் குறிக்கும். மேலும் ஆடு, பல்லக்கு, காராம்பசு போன்ற சில வாகனங்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 03 |  | 19 |
| 05 | | 06 |
| 1934 | | 2014 |

சம்பூரைப் பிறப்பிடமாகவும், சிவபுரியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். கணபதிப்பிள்ளை துரையப்பா

அவர்கள் 19.06.2014 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், துரையப்பா தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சௌந்தரராசா மற்றும் சந்திரேஸ்வரி, சந்திரசேகரம், தவராசா, நாகேஸ்வரன் (வவுனியா வலய கல்வி அலுவலகம்), இராஜேஸ்வரன், குகராசா (சவூதி), விமலேஸ்வரி (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மூதூர்), கிருபைராஜ் (ஆசிரியர்-தி/விபுலானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலு, அருச்சுணன், பவளராணி, ஜெகசோதிமலர் (ஓய்வுபெற்ற நூலகர்-குச்சவெளி), ஸ்ரீசாந்தினி, தர்மலெட்சுமி (குடும்ப நல உத்தியோகத்தர்- திருக்கோணமலை தள வைத்தியசாலை), வசந்தலெட்சுமி, மலர்மணி ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்னேஸ்வரன் (ஆசிரியர் - சண்பகா மகாவித்தியாலயம், ஈச்சலம்பற்று), ரிசுபத்மினி (ஆசிரியை- மாதுமை அம்பாள் வித்தியாலயம்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), மகாலெட்சுமி ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.06.2014
வியாழக்கிழமை (இன்று) மாலை 4.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக
திருக்கோணமலை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 33/15, சிவபுரி,
திருக்கோணமலை.
தொ.பே. இ. 0759941166, 0772367849

தகவல்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயத் தெய்வம்

## அமரர்.கணபதிப்பிள்ளை துரையப்பா

அவர்களின்

பிரிவுச் செய்தி கேட்டவுடன் எமது இல்லத்திற்கு ஓடோடி வருகை தந்தோர்களுக்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் வார்த்தை கூறியோர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மற்றும் மலர்மாலை, மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உடல், உள ரீதியாக உதவிய உள்ளங்களான உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றும் மரணக் கிரியைகளைச் செவ்வனே நிகழ்த்தி எமது தந்தையாரின் ஆத்மசாந்திக்காக அனைத்துக் கிரியைகளையும் சிறப்புறச் செய்துதவிய பிராமணோத்தமர்களுக்கும், உதவியாளர்களுக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**என்றும் அன்புடன்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

நாகப்பர் + கண்ணகியம்மா

கணபதிப்பிள்ளை, பொன்னையா, இராமப்பிள்ளை, சுப்பிரமணியம், பொன்னாச்சி, வேலுப்பிள்ளை, சி

கணபதிப்பிள்ளை →


நல்லையா, பசுபதிப்பிள்ளை, இராசம்மா, கந்தசாமி, துரையப்பா, தம்பிராச

துரையப்பா →

| சந்திரேஸ்வரி + சிவபாலு | சந்திரசேகரம் + பவளராணி | தவராசா + ஜெகஜோதிமலர் | இராஜேஸ்வரன் + வசந்தலெட்சுமி | நாகேஸ்வரன் + தர்மலெட்சுமி |
|---|---|---|---|---|
| ரிசுபத்மினி | துஷ்யதர்சினி | கோபி கிருஸ்ணா | கஜேந்திரன் | தினேஸ்காந் |
| விக்கினேஸ்வரன் | துஷ்யந்தன் | பிரணவி | கஜிலேகா | தனுஷாந் |
| பரமேஸ்வரன் | பிரியதர்சினி | | தனுசியா | கிசோத்மன் |
| மகாலெட்சுமி | நிலுஜா | | கிரிஜா | திவ்விய பிரகா |
| | நிறோஜினி | | லோஜிதன் | |
| | நிலுக்ஷன் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சா வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org